★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 65630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆவணி 13௳ செவ்வாய் (28—8—56) ★ ★ வெளியூர்: ஆவணி 14௳ புதன் (29—8—56) [இதழ் 67

நிலக்கரிவளங்களை கண்டுபிடிக்க ரூ.100 கோடி செலவில் நிறுவனம்

நாட்டிலுள்ள நிலக்கரி வளங்களைக் கண்டுபிடிக்கவும் அவற்றைப் பயன்படுத்தவுமாக ரூ. 100 கோடி மூலதனத்துடன் இந்திய சர்க்கார் ஒரு நிறுவனத்தை அமைப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2,20,00,000 டன் நிலக்கரியை உபரியாக உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில், சர்க்கார் துறையில் 1,20,00,000 டன் உற்பத்தி செய்யப்படும். இதற்கு ரூ. 60 கோடி மூலதனம் தேவையாம்.

பெற்ற தாய் காட்டும் பரிவு.....!

'மக்கள் மன்றம் நமக்கு அளிக்கிறது'

'நாட்டவர் நம்பிக்கையைப் பெற்றோம்—நடுக்கம் ஏன் தேர்தல் பற்றி?'

'விளைவு பற்றி விசாரம் வேண்டாம்'

'கடமையைச் செய்ய வாரீர், தோழர்காள்!'

'தேர்தல் திட்டம் ஒரு புதிய கட்டம்'

சென்னையில் அண்ணா தெளிவுரை

சென்னை, ஆக. 28—

சென்னையில், சேத்துப்பட்டு, புளியந்தோப்பு, வெள்ளாளத் தேனாம்பேட்டை ஆகிய இடங்களில், முறையே 25, 26, 27-ந் தேதிகளில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் அண்ணா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகளின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது:—

"திராவிட முன்னேற்றக் கழகத்தவர் வாரம் தவறாமல் கூட்டம் நடத்துகிறார்கள். சென்னை நகரிலே மட்டுமின்றி நாடெங்கிலும் பட்டிதொட்டிகளில் எல்லாம் கூட்டம் நடத்துகிறார்கள். சென்னையில் தொடர்ந்தாற்போல, இன்று—நாளை—மறுநாள் என்று மூன்று நாட்களும் நான் கலந்து கொள்ளுகிற கூட்டங்கள் நடைபெறுகின்றன.

"இப்படி நடைபெறும் கூட்டங்களில் எல்லாம் மக்கள் பல்லாயிரக் கணக்கில் திரண்டு வருகிறார்களே என்ன காரணம்?

"நாங்கள் ஒன்றும், போன மாதம் ஒரு திட்டம்—இந்த மாதம் ஒரு திட்டம் என்று புதிது புதிதாகத் திட்டங்களைக் கொண்டு வருபவர்களாக இல்லை; என்றாலும், மக்கள் மிகுந்த ஆவலோடும் ஆர்வத்தோடும் பல்லாயிரக் கணக்கில் கூட்டங்களில் கலந்து கொள்கிறார்களே, ஏன்?

"கம்யூனிஸ்டுகள் கூட்டம் கூட்டினால், 'சமீப காலம்வரை கம்யூனிஸ்டுகள் ஸ்டாலினை பெரும் வழிகாட்டி—மகத்தான தலைவன் என்றெல்லாம் புகழ்ந்தார்களே; இப்போது ஸ்டாலினை ரஷ்ய நாட்டிலே இருப்பவர்கள் ஏதேதோ குறை கூறுகிறார்களே; இங்குள்ள கம்யூனிஸ்டுகள் என்ன சொல்கிறார்கள்?' என்பதைக் கேட்டுப் போக மக்கள் வரலாம்.

'பெரியார் கூட்டம் என்றால், 'போன மாதம் இராமர் பட எரிப்பு பற்றிப் பேசினார். இப்போது, என்ன புதிய கிளர்ச்சித் திட்டம் பற்றிப் பேசுவாரோ, கேட்டுப் போகலாம்,'—என்று மக்கள் திரளலாம்!

"ஆனால், நாங்கள் தோன்றிய நாள் முதல் கூறிவரும் அடிப்படை இலட்சியத்தை மேலும் மேலும் விளக்குவதற்காகவே கூட்டம் கூட்டுகிறோம்; ஒவ்வொரு கூட்டத்திலும் மக்கள், தி. மு. கழகத்தின் அடிப்படை இலட்சியம் குறித்தும், கொள்கைகள் குறித்தும்தான் விளக்கம் பெறுகிறார்கள்; என்றாலும், கூட்டம் தவறாமல், 'கேட்டதைத்தானே கேட்கப் போகிறோம்' என்றல்லாது, மக்கள் பல்லாயிரக்கணக்கில் திரளுவதேன்?

"தான் பெற்றெடுத்த குழந்தை கன்னங்குழியச் சிரிக்கும்போது தாய் மகிழ்கிறாள்; ஒவ்வொரு முறையும் சிரிக்கும்போதும் தாய்க்கு மகிழ்ச்சி பிறக்கிறது; 'தொட்டிலில் இருக்கும்போதும் இப்படித்தானே சிரித்தான்; தவழும்போதும் இப்படித்தானே சிரித்தான்'—என்று கருதி, தத்தி நடக்கும்போது குழந்தை சிரித்தால் மகிழ்வாமலிருக்க மாட்டாள் தாய்! குழந்தை எப்போது சிரித்தாலும் தாய் மகிழுவாள். அது போலத்தான் நாட்டு மக்களும் தி. மு. கழகக் கூட்டம் போடும் போதெல்லாம் மகிழ்கிறார்கள்; பல்லாயிரக் கணக்கில் திரளுகிறார்கள்!

"தாய்க்குக் குழந்தை சிரிக்கும்போதெல்லாம் மகிழ்ச்சி பிறப்பது போலத்தான், நாட்டு மக்களுக்கு நாங்கள் பேசும்போதெல்லாம் மகிழ்ச்சி பிறக்கிறது. அதனால்தான், பரபரப்பான உணர்ச்சியூட்டக்கூடிய திட்டங்களை தி. மு. கழகம் புதிது புதிதாக மக்கள் முன் வைக்காவிட்டாலும், 'நமது கழகக் கூட்டம் நடக்கிறது' என்ற களிப்போடு-கடமை உணர்வோடு — வாஞ்சையோடு நாட்டு மக்கள் திரளுகிறார்கள்.

"மக்களின் இந்தக் கடமையுணர்வு—களிப்பு—வாஞ்சை இவற்றைத்தான் தி. மு. கழகம், 'தேர்தல் வழி காட்டி'யாகக் கொண்டிருக்கிறது.

"தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடப் போகிறது என்ற செய்தியறிந்ததும் நாட்டில் சிலர், 'தேர்தலிலா ஈடுபடப் போகிறார்கள்?' என்று கோபத்தோடும், சிலர் பரிதாபத்தோடும், சிலர் கேலியாகவும் கூறுவதை நாம் காண்கிறோம்.

"'தேர்தலிலா ஈடுபடப்போகிறீர்கள்?' என்று கேட்பவர்கள், 'தி. மு. கழகம் ஒரு அற்புதமான குடும்பம்' என்பதை மறந்துவிடுகிறார்கள்.

"ஒரு குடும்பத்தில் வேலை தேடி அலைகிறான் ஒரு மகன்; 'வேலை தேடித்தேடி அலைகிறோம். கிடைக்கவில்லை; எப்படி நாம் தண்டச்சோறு சாப்பிடுவது?' என்று, சாப்பாட்டு நேரத்தில் அந்த மகன் திண்ணையில் படுத்திருந்தாலும், பிள்ளையைப் பெற்ற தாய், 'இதற்காகவா கவலைப்படுகிறாய்? இன்று கிடைக்காவிட்டால் நாளை கிடைக்கிறது வேலை; நீ சம்பாதிக்காவிட்டால் என்ன? அண்ணன் சம்பாதிக்கவில்லையா? அப்பா சம்பாதிக்கவில்லையா? அதற்காகச் சாப்பிடாமல் இருப்பானேன்!' என்றுதான், தாய் கனிவோடு அழைப்பாள்!

"அதுபோலத்தான், நாட்டு மக்கள், தி. மு. கழகம் தேர்தலில் நின்று தோல்வி கண்டு விட்டாலும் 'ஏன் கவலைப் படுகிறீர்கள், இதற்காக; இன்றில்லாவிட்டால் நாளை வெற்றி கிடைக்கிறது' என்று கூறி எங்களை அணைத்துக் கொள்வார்கள்; அது தவிர, 'எப்படியாவது தேர்தலில் வெற்றி பெற்றுத்தானாக வேண்டும்' என்ற சூதாட்டத்தில் தி. மு. கழகம் ஈடுபடவில்லை!

"ஒருவன், தலையிலே ஒரு சாமான் மூட்டையைச் சுமந்து கொண்டும், மடியில் ஒரு ஐம்பது ரூபாய் பணம் வைத்துக்கொண்டும் வழிநடக்கிறான்; மாலையாகி, இருட்டிவிடுகிறது; இன்னும் போகவேண்டிய தூரமோ ஏராளம் இருக்கிறது; அப்போது ஒரு மரத்தடியில் நின்றுகொண்டு யோசிக்கிறான்—'இருட்டி வருகிறதே, எப்படிப்போவது?' என்று; அது போது இரண்டு வழிப்பறிக்காரர்கள் வருகிறார்கள்; ஆசாமியின் மடியில் பணமும், மனதில் பயமும் இருப்பதைக் கண்டுகொண்டு, மேலும் அவனுக்கு அச்சமூட்டுகிறார்கள்—

'எங்கே போகிறாய்?' 'அதோ, அங்கே இருக்கும் கிராமத்துக்கு!'

'அடேயப்பா, அது பத்து கல் தூரமிருக்குமே! இப்போது இருட்டிவிட்டதே! மேலும் அதோ, நான்கு கல் தாண்டியதும் அங்கே ஒரு பெரும் கணவாய் இருக்கிறது; அந்தக் கணவாயில், இரண்டு வருடத்துக்கு முன்னால் செத்துப் போன ஆட்டுக்காரப் பையனின் ஆவி—பிசாசு உலவுகிறது! எப்படிப் போவாய்? என்று வழிப்பறிக்காரர்கள் கேட்கின்றனர்.

'பிசாசு என்றால் என்ன?' என்கிறான் வழிப்போக்கன்.

'அது தெரியாதா, உனக்கு?' என்று கூறிவிட்டு, பிசாசு குறித்துக் கொடூரமான வர்ணனைகளைக் கூறுகின்றனர். வழிப் போக்கன் மிரண்டு போய், வழிப்பறிக்காரர்களுடன் சென்று பணத்தையும், மூட்டையையும் பறிகொடுத்துவிடுகிறான்.

"இந்தக் கற்பனைக் கதையை உதாரணத்திற்கு மட்டுமே சொல்கிறேன்.

"இதுபோல, தேர்தலை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் நம்மைச் சிலர், 'பேய் இருக்கிறது; பிசாசு இருக்கிறது' என்று காட்டி மிரட்டுகிறார்கள்; 'என்னோடு வந்து விடுங்கள்' என்று கூறி, நம்மிடமுள்ள—நாம் கஷ்டப்பட்டுச் சேகரித்து வைத்துள்ள மக்கள் ஆதரவை அவர்களுக்குப் பறிகொடுத்துவிட வேண்டும் என்று கூறுகிறார்கள்; எப்படி முடியும்?

"இன்னும் சிலர் நாம் தேர்தலில் நிற்கப் போவதாக அறிந்ததும், 'மையாண்டி' செய்யத் துவங்கியிருக்கிறார்கள்.

"நாம் இந்தத் தேர்தலில் கலந்து கொள்ளவில்லை என்றால், 'வளர்ந்திருக்கிறோம்: வளர்ந்திருக்கிறோம்' என்று கூறி என்ன பயன்?

"கணவாயில் உள்ள பிசாசுக்கு பயப்பட்ட வழிப் போக்கனைப் போல, நாம் ஒன்றும் பயப்படப் போவதில்லை

"மன உறுதியோடுதான்—திட்டத்தோடுதான் தேர்தலில் ஈடுபடுகிறோம்.

'தேர்தலில் ஈடுபடுவதற்கென்றே பணம் சேகரித்து வைத்துக்கொண்டிருப்பவர்கள் தேர்தல் வருகிற நேரத்தில் கிலி கொள்ளுவார்கள்; தோற்றுப்போனால், 'ஐம்பதாயிரம் போயிற்றே—அறுபதினாயிரம் போயிற்றே' என்று வயிற்றிலடித்துக்கொள்வார்கள். வெற்றி பெற்றாலும், வெற்றி ஊர்வலத்திலேயே 'பிரேதக்களை' சொட்டும்—'யார் யாரிடத்திலெல்லாம் பணம் வாங்கினோம்; அவர்களெல்லாம் நாளை வந்து கேட்பார்களே, என்ன செய்வது? என்ற கவலைதான் இருக்கும்.

"கையில் பணமில்லாதவன் தேர்தலில் தோல்வியுற்றால் ஏன் கவலைப்பட வேண்டும்? மடியில் பணம் வைத்திருப்பவன்தான் கவலைப்பட வேண்டும்; அதுவும் தப்பான வழியில் பணம் சேர்த்தவர்கள் தான் கவலைப்பட வேண்டும்!

"நமக்கு வெற்றி—தோல்வி குறித்துக் கவலை இல்லை; நாம் தேர்தலில் தோற்று விடுவதால் நமது வலிவு ஒன்றும் குன்றிவிடாது.

"எனவே, நாம் தேர்தலில் ஈடுபடும்போது, 'நம்மிடம் பணம் இருக்கிறதா இல்லையா?' என்று பார்ப்பதைவிட, 'நமக்குத் தேர்தலில் நிற்க உரிமை இருக்கிறதா இல்லையா?' என்பதை எண்ணிப் பார்க்கும்படி, 'இவர்களிடம் பணம் ஏது?' என்று கேட்பவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

"பையனுக்குக் கல்யாணம் செய்ய வேண்டும் என்றால், என்ன கேட்பார்கள் ஊரில்? 'கல்யாணம் செய்கிற வயது வந்துவிட்டதா, பையனுக்கு? குடும்பத்தைக் காப்பாற்றத் தொழில் ஏதும் செய்கிறானா? நல்ல குணவான்தானா?'—இதைத்தானே கேட்பார்கள்?

"இந்த இலக்கணப்படி நமக்குக் கடந்த எட்டாண்டுக் காலமாக மக்களிடத்தில் நல்ல தொடர்பு இருக்கிறது; அது பையனுக்கு வயது வருவதைப்போன்றது.

"குடும்பத்தை நடத்துகிற பக்குவம், கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக்கொள்ளுகிற ஆற்றல் இருக்கிறதா என்றால், கழகத்திற்கு நிச்சயம் இருக்கிறது.

"மும்முனைப்போரில் நாம் பட்ட கஷ்ட நஷ்டங்களை நாடு நன்கறியும்! துப்பாக்கியால் சுட்டுப் பிணம் கீழே விழுந்ததும் நம் தோழர்கள் ஒன்றும் ஓடிவிடவில்லை; மேலால் நடக்கத்தான் செய்தார்கள், பிணத்தினைப் பார்த்த பிறகும்! 'உன் கடமை முடிந்துவிட்டது; இதோ நாங்கள் எங்கள் கடமையைச் செய்யப் புறப்படுகிறோம்'—என்று கூறிவிட்டு, விழுந்தவனுக்கு வீரவணக்கம் செலுத்திவிட்டு தொடர்ந்து களம் நோக்கிப் புறப்படத்தான் செய்தார்கள்.

"ஆகவே, தேர்தலில் ஈடுபட ஒரு கட்சிக்கு என்னென்ன இலட்சணங்கள் — ஆற்றல்கள் வேண்டுமோ, அவை நமக்குத்தேவையான அளவு இருக்கத்தான் செய்கிறது.

"'இவர்களிடம் பணம் ஏது? காங்கிரஸ்காரனிடத்தில் ஏராளமாகப் பணம் இருக்கிறதே; இவர்கள் ஏன் போய் தேர்தலில் ஈடுபட்டுக் கஷ்டப்பட வேண்டும்?' என்று பெரியார் சொல்லக்கூடும்.

"நம்மிடம் பணம் இல்லை என்பதும் உண்மை; காங்கிரசாரிடத்தில் பணம் இருக்கிறது என்பதும் உண்மை; ஆனால், காங்கிரசாரிடத்தில் உள்ள பணக்காரர்கள் எப்படிப்பட்டவர்கள்?

"சேலம் மதுரைப் பிள்ளை என்பார், காங்கிரஸ் சார்பில் தேர்தலில் நிறுத்தி வைக்கப்படுகிறார் என்று வைத்துக் கொள்ளுவோம்; அவர் கூட்டம் ஒன்றுக்கு வந்து, 'மக்களே! நான் காங்கிரசுக்காக இத்தனை ஆண்டுக் காலம் பாடுபட்டேன்; இன்னின்ன கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக்கொண்டேன்; எனவே, எனக்கு ஓட்டுப் போடுங்கள்,' என்று கேட்க முடியாது; 'காங்கிரஸ் படாத பாடுபட்டு சுதந்திரம் வாங்கியது; அந்தக் கட்சி சார்பில் நான் தேர்தலுக்கு நிற்கிறேன்,' என்றுதான் கூறுவார்—கூறமுடியும். காங்கிரசில் உள்ள பணக்காரர்கள் இப்படிப்பட்டவர்கள்தான்! எல்லாம் இரவல் சரக்கு!

"உண்மையான தியாகம் புரிந்த காங்கிரஸ்காரன் ஓரமாக நின்றுகொண்டு, கிளியை வளர்த்து பூனை கையில் கொடுப்பதைப்போலக் கஷ்டப்பட்டு, 'வேலை செய்த தொகுதியை மதுரைப் பிள்ளையிடம் தந்தோமே' என்று ஏங்குகிறான். இன்று, 'காங்கிரஸ்' என்ற பெருங்காய டப்பிக்குள் ஏதோ பொருளைப் போட்டு வைத்துக்கொண்டுதான் காங்கிரஸ், 'இது பெருங்காய டப்பி' என்று கூறிவருகின்றனரே தவிர, பெருங்காய டப்பியில் பெருங்காயமும் இல்லை; மக்களும் பெட்டியைக் காட்டியதும் வாங்கிவிடத் தயாராக இல்லை. 'பெட்டியைத் திறந்து காட்டு, பார்க்கிறேன்!' என்று கூறுகிற நிலைக்கு மக்கள் வந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 28—8—'56 செவ்வாய்

நியாயமுண்டு!

இலங்கைத் தீவில் சில இலட்சக்கணக்கான இந்தியத் துணைக் கண்டத்துத் திராவிடப் பெருங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். விரல்விட்டு எண்ணத்தக்க வடநாட்டினரும் அங்கு இருந்து வருகின்றனர் என்பதும் உண்மையாகும்.

அம்மக்களில் பெரும்பான்மையினர் அத்தீவிற்குச் சென்றது தேயிலைத் தோட்டத்துக் கூலிகளாகவே அல்லாது வேறு அரசியல் ஆதிக்கக் கருத்துடன் அல்ல. அதுவும், தம்சுய இலாபம் கருதி, அன்றிருந்த வெள்ளைத் துரைத்தனத்தால் அவர்கள் கடத்திச் செல்லப்பட்டனரே அல்லாது, அவர்களாக முழு விருப்புடன் மேற்கொண்ட குடியேற்றம் அல்ல.

வெள்ளையர் ஆதிக்கத்தில் உள்நாட்டில் இருந்த வேலையற்றநிலை, வெள்ளை துரைமார்கள் அழைத்ததும், அத்தீவிற்குக் கூலிகளாகக் குடியேற இங்குள்ளாரில் சிலர் முந்தினர்.

தாய் நாட்டில் பட்டினி கிடந்து சாவதினும், கடல் கடந்து சென்று மாடுபோல் உழைத்தாவது உயிரைக் காப்பாற்றிக் கொள்வோம் என்ற நப்பாசையில், அம்மக்கள், வெள்ளையர் அழைப்பை வேண்டா வெறுப்புடன் ஏற்றுச் சென்றனர்.

தாங்கள் வேற்றுநாட்டிற்கு வெளியேறுவதின் மூலம், தம் தம் குடும்பங்களின் எண்ணிக்கைக் குறைந்து, அக்குறைவின் மூலம் எஞ்சி இருப்பவர்களாவது இருப்பதைக் கொண்டு கால் வயிறு கஞ்சியாவது குடித்து, மிஞ்சிய நாட்களை அதிகக் கவலையின்றி கழித்துச் சாகட்டும் என்ற நல்லெண்ணத்தை, அன்று, இலங்கைத் தீவிற்குச் சென்றவர்கள் கொண்டிருந்தனர் எனக்கொள்வது உண்மைக்கு மாறுபட்டதன்று.

தங்கள் வயிற்றை நிரப்ப இலங்கைத் தீவு செல்ல மேற்கொள்ளும் முயற்சியில், தங்கள் பசி தணியப் பெறுவதையும், தாய் நாட்டில் உள்ள தங்கள் குடும்பத்தினரின் வறுமை சிறிதளவு குறைவதையும் வெளியேறிச் செல்ல முன்வந்தவர்கள் நன்கு விளங்கிக்கொண்டனர். அத்தெளிவின் காரணமாக அவர்கள், பிறந்த பொன்னாட்டையும், தோன்றிய குடும்பங்களையும், பழகிய சுற்றத்தார்களையும் உறைந்துவந்த சிறு சிறு குடில்களையும், உள்ளம் துடிதுடிக்க, உடல் பதைபதைக்க, கண்கள் குளமாகக் 'கங்காணி'களின் சிவப்பேறிய கண்கள் காட்டிய வழி, ஆங்கிலத் துரைமார்களுக்கு அடிமையாகிக் கப்பலேறினர்; இலங்கைத் தீவை அடைந்தனர்; மலைகளை வெட்டிச் சமன் செய்து, கரைத்த மேட்டைப் பள்ளத்தில் தள்ளி நிரப்பி, காடுகளைத் திருத்திச் சீராக்கித் தேயிலைச் செடிகளை வளர்த்து, குடியேறிய இலங்கைத் தீவின் பொருளாதாரத்தை உருவாக்கித் தந்தனர்.

அந்தப் பொருளாதார அமைப்பின்மீது ஆரோக்யமாக அமர்ந்துகொண்டு அரசோச்சும் சிங்கள ஆதிக்கக்காரர்கள், முன்னாள் எஜமானர்களான ஆங்கிலத் துரைத்தனத்தார்களிடம் கைகுலுக்குகின்றனர்; விருந்துண்ணுகின்றனர்; கொஞ்சுகின்றனர் ஒரு சமயம்—பாராட்டுகின்றனர் மற்றோர் சமயம்—பேரம் பேசி நினைத்ததைப் பெற்று மகிழ்கின்றனர் வேறோர் சமயம்.

ஆனால் அந்த ஆதிக்கபுரியினர், தங்களுக்கு இப்பெரும் அந்தஸ்தைத் தேடித் தந்தத் தேயிலைப் பொருளாதாரத்தில், இந்தியத் துணைக் கண்டத்தின் தென்பகுதியிலிருந்து வந்தத் திராவிடப் பெருங்குடி மக்களின் 'மிருக உழைப்பு' மறைந்து கிடக்கும் உண்மையை மறந்துவிட்டு, அவர் வழிவந்த இன்றுள்ள மக்களைத் துன்புறுத்துவதில் முனைந்துள்ளனர். அவர்கள் ஆர்ப்பாட்டம், 'உங்கள் முன்னோர்கள் ஏன் காட்டைத் திருத்தினர்? மலைகளை மட்டமாக்கினர்? மேடு பள்ளங்களை நிரவலாக்கினர்? தேயிலையைப் பயிரிட்டனர்? எங்கள் பொருளாதார அஸ்திவாரத்தை அமைத்தனர்? எங்கள் நாட்டைக் காடாகவே இருக்கச் செய்வதை விடுத்து போக பூமியாக ஏன் மாற்றவேண்டும்? எங்களையும் உலக அவை முன் ஒப்பு நோக்கும் நாகரிக மக்களாக ஏன் ஆக்கவேண்டும்? நாங்கள் காட்டுமிராண்டிகளாகவே இருக்கவிட்டிருப்பதால் இவர்களுக்கு என்ன நஷ்டம்? மாக்கள் நிலையை மாற்றி மக்கள் நிலைக்கு எங்களை உயர்த்தியது ஏன்? அது கூடாது—அடாது! இவ்வகையில் உங்கள் முன்னோர்கள் எங்களுக்குத் தீங்கிழைத்து உள்ளனர்! அவர்கள் செய்த அந்த 'அக்கிர'மத்திற்கு உங்களை பழிவாங்குவதாகத் தீர்மானித்துவிட்டோம்! எங்கள் தண்டனைக்குத் தயாராக இருங்கள்!' எனக் கேட்டுத் தண்டிப்பது போல் இருக்கிறது.

நன்றி கெட்டவர்கள்!

இந்தியத் துணைக் கண்டத்தின் தென் பகுதியிலிருந்து அன்று அங்கு சென்ற திராவிடப் பெருங்குடி மக்களின் வழிவந்தவர்களாக இன்று அத்தீவில் உள்ளவர்களை, தீவின் குடிமக்களாக ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது, அத்தீவில் உள்ள சிங்கள துரைத்தனம்!

சிங்கள துரைத்தனத்தின் மனிதாபிமான மற்ற இச்செயலை 'அறநெறி' என முழு மனதுடன் ஏற்றுக்கொள்ளுவதுபோன்று, இந்தியப் பேரரசு என்ற போர்வையில் விளங்கும் வடவர் ஏகாதிபத்தியமும், அத்திராவிட மரபினரைத் தம் குடிமக்கள் என ஒப்புக்கொள்ள மறுத்து, அவர்களை நாடற்ற 'நாடோடி'களெனக் கூறத் துணிந்துவிட்டது.

அதே நேரத்தில், கிழக்கு வங்கத்திலிருந்து நாளை வெளியேறி மேற்கு வங்காளத்தில் தஞ்சம் புக இருக்கும் 'பாகிஸ்தான் குடிமக்களை' வரவேற்கவும், வாழ்வளிக்கவும் கோடி கோடியாகச் செலவிட, முன்னேற்பாடாகத் திட்டம் தீட்டி வைத்திருக்கிறது வடவர் ஏகாதிபத்தியமான இந்தியப் பேரரசு.

ஏக இந்தியாவாதிகள் இந்த இருவகை மக்களிடத்தில் இந்தியப் பேரரசு நடந்துகொண்டு வரும் விதத்தைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். நாம் பேதம் பேசுவதற்குப் போதிய நியாயம் இருக்கிறதா இல்லையா என்ற உண்மை அப்பொழுது தான் நன்கு விளக்கமாகும். நாம் பேதம் பேசுவதில் நியாயமுண்டு என்பதற்கு இத்துறையில் இந்தியப் பேரரசின் செயல்முறை ஒன்றே போதிய சான்றாகும்.

மரணவரி மூலம் வசூலான தொகை

பம்பாய், உத்திரப்பிரதேசத்தில் அதிகம் கிடைத்ததாம்

"மரண வரிச் சட்டத்தின்மூலம் 1955-ம் ஆண்டில் மட்டும் ரூ. 1,44,69,884 வசூலாகியுள்ளது" என்று, மக்கள் சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் எம். சி. ஷா தெரிவித்துவிட்டு மேலும் சொன்னார்:—

"1955-ம் ஆண்டில் மட்டும் மரணவரி வசூலிக்கப்படவேண்டியவர்களின் பட்டியலில் 4,031 பேர்களுடைய பெயர் இடம் பெற்றிருந்தன; அவர்களில் 2,947 பேர்களிடமிருந்து வரி வசூலிக்கப்பட்டுவிட்டது.

"இந்தியாவிலேயே இந்த வரியின்மூலம் பெருமளவு தொகையாகப் பம்பாயில் ரூ. 60,22,890-ம், உத்திரபிரதேசத்தில் 32,10,069ம் வசூலாயிற்று; இமாசலப் பிரதேசம் மணிப்பூர், திரிபுரா, விந்தியப் பிரதேசம் ஆகியவற்றிலிருந்து மரணவரி எதுவும் வசூலிக்கப்படவேயில்லை."

'ஏற்படும் இன்னல்களை எல்லாம் 'ஒன்று' என்றா கருதுகிறார்கள்?'

'இந்தியா ஒரே நாடு என்று பேசுவோர் அவ்வாறு செயலாற்றக் காணோமே!'

'இந்தியைத் திணிப்பது திராவிடப் பண்பாட்டை ஒழித்துவிடத்தானே?'

திருச்சியில் கண்ணதாசன் கருத்துரை

"சிலர் சற்று வருத்தத்தோடு கேட்கிறார்கள்—இந்தியாவிலிருந்து பிரிவதா? நேருவிடமிருந்தா பிரிந்துபோக வேண்டுமென்கிறீர்கள்?'—என்று! அவர்கள் ஒன்று உணரவேண்டும்—'இமயம்முதல் குமரிவரை இந்தியா ஒரே நாடு; நாடு பூராவிலும் வாழ்கின்ற மக்கள் அனைவருமே பாரதமாதாவின் புத்திரர்கள்தான்; அவர்களுக்குள் பேதமும் இல்லை—பிரிவும் இல்லை' என்றால், 'கன்னியாகுமரியில் ஒரு பாரதபுத்திரனுக்கு இன்னல் என்றால் இமயத்தில் இருக்கின்றவன் கண்ணீர்விட வேண்டும்; இமயத்திலே வாழ்பவன் துன்பத்தால் துடிக்கிறான் என்றால் கன்னியாகுமரியில் இருப்பவன் நெஞ்சு பதைபதைக்க வேண்டும்; அதுதானே எல்லோரும் ஒன்று என்பதற்கான பொருள்? ஆனால் நடைமுறையில் என்ன காண்கிறோம்?"

—என்று, திருச்சி டவுன் ஹால் மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் தோழர் கண்ணதாசன் அவர்கள் கேள்வி எழுப்பித் தொடர்ந்து பேசியதாவது:—

"கட்ச் பகுதியில் ஏற்பட்ட பூகம்பத்தின் விளைவுகளை நேரில் பார்த்து, அல்லலுக்கானான அந்த மக்களுக்கு ஆறுதலும் உதவியும் அளிக்கப் பண்டித நேரு தனி விமானத்தில் பயணமானார் என்று செய்தி தரப்பட்டுள்ளது; பாராட்ட வேண்டியதுதான்; ஆனால், அண்மையில் தமிழகத்தின் சில பகுதிகளில் புயலும் வெள்ளமும் புகுந்து கோரம் விளைவித்தபோது நேரு பண்டிதர் அந்தப் பகுதிகளில் வந்து பார்வையிடவில்லையே—ஏன்? அனுதாபம்கூடத் தெரிவிக்கவில்லையே! அப்போது ஏன் அவருடைய வாய் அடைத்துக் கிடந்தது?

"அந்தச் சமயம் டில்லிக்குச் சென்று அவரைச் சந்தித்துவிட்டுத் திரும்பிய காமராசர் இங்கு வந்து சொன்னார்—'நேருவிடம் நான் புயல் சேதங்கள் பற்றிக் கூறினேன்; அதற்கு அவர் மிகவும் வருத்தப்பட்டு தன் அனுதாபத்தைத் தெரிவிக்கச் சொன்னார்'—என்று! அவரே அனுதாபம் தெரிவிக்கவில்லை; இவரிடம் தெரிவிக்கச் சொன்னாராம்! இந்தியா பூராவும் ஒரே நாடுதான் என்றால், ஏன் இந்த வேறுபாடு?

'இலங்கையில் மொழி உரிமைக்குக் கிளர்ச்சி செய்தத் தமிழர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து 12 தமிழர்களைச் சுட்டு வீழ்த்தியிருக்கிறது, அங்குள்ள பண்டாரநாயகாவின் சர்க்கார்! இதுவரையில் நேரு பண்டிதர் தன் வாயைத் திறந்து ஒரு வார்த்தை—'ஏன்?'—என்று கேட்கவில்லையே! நாம்தானே கேட்கிறோம்!

"பண்டைத் தமிழகத்தை மூவேந்தர் பரம்பரை ஆண்டபொழுது நூற்றுக்கு மேற்பட்ட தடவைகள் இலங்கையை அவர்கள் வெற்றி கொண்டதாக வரலாறு எடுத்துக் கூறுகிறது; இன்றைக்கு அந்தத் தமிழர்களின் கதி என்ன? நாதியற்றப் பிணங்களாய் வீதிகளிலே சுட்டு வீழ்த்தப்படுகிறார்கள்; இந்திய சர்க்காரும், சென்னை சர்க்காரும் 'இந்தப் பிரச்சினையில் தலையிடுவதில்லை' என்று இலங்கை சர்க்காருக்கு வாக்குறுதி அளிக்கிறது. 'இது எங்கள் சொந்த விஷயம்' என்று அறிவிக்கிறார் பண்டாரநாயகா! ஏன் இந்த அவலநிலை?

"அதுமட்டுமா? உலகத்திலேயே முதலில் தோன்றிய—தொன்மையான மொழி என்று சிறப்புப் பெற்ற தமிழ் மொழியை அழிக்க—அதன் மேல் ஆதிக்கம் செலுத்த இங்கே சொல்வளமற்ற இந்தி மொழியை மெல்ல மெல்லத் திணிக்கிறார்களே! புகைவண்டி நிலையம், அஞ்சல் நிலையம் என்று வளர்ந்து, இப்போது புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள ரூபாய் நாணயங்கள் வரையில் இந்தி புகுந்துள்ளது! இது எதைக் காட்டுகிறது? ஒரு மொழி பேசும் பிரதேசத்தில் இன்னொரு அன்னிய மொழி தன் காலை ஊன்றுகிறது என்றால், என்ன அர்த்தம்? அது எதிர்காலத்தில், பிரதேச மொழியை அழித்து அந்த மொழி பேசுவோரின் பண்பாட்டைச் சீர்குலைத்துத் தன் கலாசாரத்தை நிலைநாட்டி விடும் என்பதுதானே? இதை எப்படி அனுமதிக்க முடியும்?

"சென்ற ஆண்டில் சென்னை ஆவடியில் நடைபெற்றக் காங்கிரஸ் மாநாட்டில் 8 இலட்சம் மக்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள்; அதில் இந்தி தெரியாத தமிழ் மொழி பேசும் மக்கள்தான் பெரும்பான்மையினர்—நான்கு இலட்சத்து எண்பதினாயிரம் பேர் வரையில்! மீதி இருக்கின்ற 20,000 பேர்தான் இந்தி மொழி தெரிந்த வடநாட்டவர்! எனினும், தமிழ் நாட்டில் நடத்தப்பட்ட அந்த மாநாட்டில் காலை முதல் மாலை வரையில்

(4-ம் பக்கம் பார்க்க)

விசைத் தறிகளைப் புகுத்துவதால் கைத்தறிகளில் குறுக்கீடு இருக்காதாம்!

சென்னை சர்க்கார் தரும் விசித்திர விளக்கம்

சென்னை, ஆக 26—

கைத்தறிகளைப் பதிவு செய்யும் கட்டாய ஏற்பாட்டிற்கும், விசைத் தறிகள் ஏற்படுத்துவதற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றும், கைத்தறிகளின் தொகையிலோ அல்லது அத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களின் தொகையிலோ எவ்விதக் குறுக்கீடும் இராதென்பதையும் தெளிவுபடுத்த சர்க்கார் விரும்புவதாக சென்னை சர்க்கார் விடுத்திருக்கும் அறிக்கை ஒன்றில் காணக்கிடக்கிறது.

கைத்தறிகளைக் கட்டாயமாகப் பதிவு செய்துகொள்வதற்கான அவகாசத்தை இந்திய சர்க்கார் வருகிற நவம்பர் திங்கள் முடிய நீடித்துள்ளனராம்.

கைத்தறிகளைக் கட்டாயமாகப் பதிவு செய்துகொள்ள வேண்டுமெனபதும், இந்தக் கட்டாயப் பதிவு ஏற்பாடு நாட்டிலுள்ள கைத்தறிகள் பற்றியத் தகவல்களைச் சேகரிப்பதற்குத்தான் என்றும் ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.

பதிவு செய்துகொள்வதற்கோ, வருடந்தோறும் அவற்றைப் புதுப்பித்துக்கொள்வதற்கோ எவ்விதக் கட்டணமும் கிடையாதென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நோக்கத்தில் பழைய குடிசைத் தறியை நசுக்குவது சர்க்காரின் நோக்கமல்ல. இங்குள்ள கைத்தறியாளர்கள் விசைத்தறிகள் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை"

என்று, முதலமைச்சர் காமராசர் அவர்கள் இங்கு நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

★

டில்லி திரும்பப் பெறவில்லையானால்!

'கைத்தறி குழு உறுப்பினர்கள் வெளியேறுவர்'

தோழர் சோமப்பா எச்சரிக்கை

"கைத்தறிகளுக்குப் பதில் விசைத் தறிகளைப் புகுத்தும் இந்த விரும்பத்தகாத—தீங்கு விளைவிக்கும் திட்டத்தை இந்திய சர்க்கார் திரும்பப் பெறத் தவறினால், அகில இந்திய கைத்தறிக் குழுவில் அங்கம் வகிக்கும் அதிகாரப் பற்றற்ற உறுப்பினர்கள் கூட்டாக இராஜிநாமாச்செய்துவிடுவர்"

என்று, குழுவின் உறுப்பினரான சோமப்பா குறிப்பிட்டுவிட்டு, மேலும் சொன்னார்:—

"இந்தத் திட்டத்தினால் கைத்தறி நெசவாளர்களில் பெரும் பகுதியினர் வேலையிழக்க நேரிடும். கைத்தறித் தொழிலை நம்பியிருக்கும் இலட்சக்கணக்கானவர்களின் பொருளாதார நிலை சீர்கேடுறும்."

★

பரீட்சார்த்தத் திட்டம்தானாம்!

பவானி, ஆக 24—

"விசைத் தறி ஒரு பரீட்சார்த்தத் திட்டமே; பல கோடி ரூபாய் செலவில் பழைய குடிசைத் தொழில்களைப் புதுப்பிக்கின்ற

பண்ணைக்காடு தி. மு. கழக முதலாவது ஆண்டு விழா

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., எம். எஸ். இராமசாமி, சத்தியவாணிமுத்து முழக்கம்

மதுரை மாவட்டம்—பண்ணைக்காடு தி. மு. கழக முதலாவது ஆண்டு விழா—பாண்டியனார் நினைவு மன்ற இரண்டாவது ஆண்டு விழாப் பொதுக்கூட்டம், 15-8-56 மாலை 4 மணிக்கு, பன்னீர்ச் செல்வம் திடலில் சிறப்புற நடைபெற்றது.

பிற்பகல் 2 மணிக்கு முக்கிய வீதிகளின் வழியாக ஏராளமான கழகத் தோழர்களும் பொது மக்களும் ஊர்வலமாகச் சென்று கழகக் கொள்கைகளை விளக்கும் வாக்கியங்களை முழக்கினர்.

மாலை $3\frac{1}{2}$ மணிக்கு ஊர்வலம் பன்னீர்ச்செல்வம் திடலில் முடிவுற்றது.

விழாப் பொதுக்கூட்டத்திற்கு மதுரை தோழர் வசனப்பித்தன் தலைமை வகித்தார்.

தோழர் ஏ கோவிந்தசாமி எம். எல். ஏ., பேசுகையில், கடந்த ஐந்து ஆண்டுகளாகக் காங்கிரஸ் சர்க்கார் செய்துள்ள அடக்கு முறை அட்டூழியங்களை எடுத்துக் கூறினார்.

அடுத்துத் தோழர் எம் எஸ் இராமசாமி அவர்கள் கைத்தறி நெசவாளர்களின் குறைகளையும் அதனை ஓரளவு தீர்த்துவைக்கத் தி. மு. கழகம் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் விவரித்துப் பேசினார்.

பின்னர் டாக்டர் சத்தியவாணி முத்து அவர்கள் பேசுகையில், காங்கிரஸ் ஆட்சியில் திராவிட மக்களுக்கு யாதொரு பயனும் உண்டாகவில்லையென்றும், குறிப்பாகக் காமராசர் பதவியேற்றதிலிருந்து தமிழர்களின் உரிமைகளைப் பறிகொடுத்துத் தமது பதவி—அதிகாரங்களைப் பாதுகாத்து வருகிறார் என்றும், எனவே அடுத்துவரும் தேர்தலில் தமிழகத்தைக் காட்டிக் கொடுப்பவர்களுக்குப் பெருமக்களும் குறிப்பாகத் தாய்மார்களும் தக்க பாடம் கற்பிக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

இறுதியாகத் துணைப் பொதுச் பொதுச்செயலாளர் என்.வி நடராசன் திராவிட முன்னேற்றக்கழகம் சென்ற ஆறு ஆண்டுகளாக ஆற்றி வரும் பணியினை விவரித்தும், ஏழை—நடுத்தர மக்களின் நல்வாழ்வுக்காகவும் திராவிடத்தின் தனி உரிமைக்கும்—குறிப்பாகத் தமிழ் நாட்டின் உண்மையான விடுதலைக்காகவும் திராவிட முன்னேற்றக்கழகம் ஆற்றிவரும்பணியினையும் தமிழகத்திற்குரித்தான தேவிகுளம் பீர்மேடு போன்ற பகுதிகள் தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டிய பிரச்சினையில் தி. மு கழகம் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் ஐந்தாண்டுத்திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டு வருவதையும், இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையையும் விளக்கிப் பேசினார்.

கூட்டத்தில் தேர்தல் நிதிக்காக ரூபாய் ஐம்பது பண்ணைக்காடு தி. மு. கழகச் சார்பில் துணைப் பொதுச்செயலாளரிடம் கொடுக்கப்பட்டது.

பின்னர் செயலாளர் கே. பி. பாலு நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

சிவகிரி உயர்நிலைப்பள்ளி சிறப்புக் கூட்டத்தில் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன்

16—8—56 மாலை $4\frac{1}{2}$ மணிக்கு, சிவகிரி பாலவிநாயகர் உயர்நிலைப் பள்ளி தமிழ்ச் சங்கச் சார்பில், பள்ளி மண்டபத்தில் தலைமைத் தமிழ் ஆசிரியர் தலைமையில் சிறப்புக் கூட்டம் ஒன்று நடைபெற்றது ஏராளமான மாணவ—மாணவிகளும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், 'மாணவர், நேற்று—இன்று—நாளை' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினார்.

மாலை 4 மணிக்குத் தோழர் என். வி. நடராசன் அவர்கள் உயர்நிலைப் பள்ளிக்குவந்தார். அவரை தலைமை ஆசிரியர் அரசப்பனார் அவர்கள் வரவேற்று மற்ற ஆசிரியர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

சிறப்புக்கூட்டம் 4-30 மணிக்குத் துவங்கப்பட்டது. மாணவச் செயலாளர், என். வி. நடராசன் அவர்களுக்கு மலர் மாலையை அணிவித்து, வரவேற்புரை நிகழ்த்தினார்.

தோழர் என். வி. நடராசன் அவர்கள் தமது சொற்பொழிவில், மாணவர்கள் முன்னைய நாட்களில் கடைப்பிடித்து வந்த முறையையும், இன்று அந்த முறையிலிருந்து மாற்றமடைந்து கால நிலைக்கேற்பத் தங்களுடைய கல்வித் துறையைப் பயன்படுத்த வேண்டுமென்ற மறுமலர்ச்சி மாணவர்களிடையே வளர்ந்து வருவது குறித்தும், நம் தாயகத்தின் வருங்கால வாழ்வு நிலைபெற்றிருக்க வேண்டுமானால், மாணவர்கள் தாம் பயின்றதைப் பகுத்தறிவை முன் வைத்துச் சிந்தித்துப் பார்த்து அதனை மக்கள் மன்றத்தில் பரவச் செய்யும் பணியில் ஈடுபடுதல் வேண்டுமென்றும், பள்ளிகளில் விஞ்ஞான அறிவைப் பெறும் மாணவர்களும், அவ்வித உயரிய அறிவை அளிக்கும் ஆசிரியர்களும், தங்கள் வாழ்க்கையில் — நடைமுறையில் மூடப் பழக்க வழக்கங்களுக்கு ஆளாகக்கூடாதென்றும் அவ்வித உயர்ந்த கருத்தினை நம் தாயகத்துக்கு மட்டுமல்லாமல் பொதுவாக உலக மக்களுக்கே வழிகாட்டியாக இருக்குமாறு வள்ளுவர் அளித்திருக்கிறாரென்றும், 'அவர்கள் செய்தார்கள்—நான் செய்கிறேன்' என்பதற்குப் பதிலாக 'அவர்கள் அந்தக் காலத்திற்கு ஏற்ப நடந்தனர்; இன்று அது எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ள முடியும்?—அதனால் எதிர்காலத்திற்கு என்ன நன்மை பயக்கும்?' என்பதை ஆராய்ந்து சிந்தித்துச் செயலாற்றுமாறு குரலெழுப்பிய உலக மேதைகளான சாக்ரடீஸ், வள்ளுவர் போன்றவர்களின் அறிவுரையை மாணவர்கள் தங்களின் ஓய்வு நேரங்களில் மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டுமென்றும், பள்ளிப் பருவத்தில் தங்களின் கல்வித்துறையில் கண்ணும் கருத்துமாயிருத்தல் வேண்டுமென்றும் குறிப்பிட்டு நீண்டதோர் சொற்பொழிவாற்றினார். தலைமை ஆசிரியருக்கும், மற்ற ஆசிரியர்களுக்கும் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

தலைவர் முடிவுரையுடன் சிறப்புக்கூட்டம் மாலை 6-30 மணிக்கு முடிவுற்றது.

தொழில் நிர்வாகத்தில் தொழிலாளருக்குப் பங்கு

டில்லி யோசிக்கிறதாம்

புதுடில்லி, ஆக. 26—

தொழில் நிர்வாகத்தில் தொழிலாளர்களைச் சம்பந்தப்படுத்துவது பற்றிய நுணுக்க விஷயங்களைத் தற்போது சர்க்கார் பரிசீலனை செய்து கொண்டிருப்பதாகவும், சில இரயில்வே தொழிற்சாலைகளில் இந்த முறையை முதலில் ஏற்படுத்துவது குறித்து ஆலோசனைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் மக்கள் சபையில் துணைத் தொழிலாளர் அமைச்சர் ஆபித் அலி தெரிவித்திருக்கிறார்.

தினக்கூலி முறையால் தொழிலாளருக்கு இலாபமாம்!

புதுடில்லி, ஆக. 24—

சாத்தியமான இடங்களிலெல்லாம் சர்க்கார் தினக்கூலி முறையைப் பின்பற்றி வருகிறதென்று மத்திய தொழிலாளர் இலாகா துணை அமைச்சர் மக்கள் சபையில் கூறியிருக்கிறார்.

மேலும், தினக்கூலி முறையில் தொழிலாளர்களுக்கு அதிக இலாபம் கிடைப்பதாகவும் அவர் கூறினாராம்.

அந்தமானில் காப்பி சாகுபடி செய்யப்படும்?

அந்தமான் நிக்கோபார் தீவுகளில் காப்பி சாகுபடி செய்வதற்கான நிலையங்களை ஆராய்ந்தறிவதற்காக இரண்டு அதிகாரிகளை அங்கே அனுப்பிவைப்பதென்று இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனராம்.

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகம்

தோழர் சம்பந்தம் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்

முன்னாள் செயலாளருக்குப் பாராட்டு

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. டி. எஸ். மணி அவர்கள் உடல் நலக் குறைவால் செயலாளர் பொறுப்பிலிருந்து விலகிவிட்டதால், வேறு செயலாளரைத் தேர்ந்தெடுக்க 26—8—56 பிற்பகல் 2 மணிக்கு, காஞ்சிபுரத்தில், 'திராவிட நாடு' அலுவலகத்தில், செங்கற்பட்டு மாவட்ட தி. மு கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தலைமை வகித்தார். பெருவாரியான உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட வேண்டியுள்ளவைகளை விளக்கினார்.

அடுத்து செயலாளர் கே. டி. எஸ். மணி அவர்கள் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்வதற்கு பொதுச்செயலாளர் அனுமதி தந்ததை வாசித்துக் காட்டப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன், கடந்த ஓராண்டுகாலமாக மாவட்ட செயலாளராயிருந்து அரும்பணியாற்றிய தோழர் கே. டி. எஸ். மணி அவர்களை மனமாரப்பாராட்டுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

பின்னர், செயலாளர் பதவிக்கு குன்றத்தூர் டி. என். சம்பந்தம் அவர்களை காஞ்சி-கல்யாணசுந்தரம் முன்மொழிய, ஈழத்து அடிகள் வழிமொழிந்தார்.

வேறு யாரும் போட்டியிடாமையால், தோழர் டி. என். சம்பந்தம் அவர்கள் செங்கற்பட்டு மாவட்ட தி. மு கழகச் செயலாளராக ஒரே மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

புதிய செயலாளரைப் பாராட்டி, தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை, ஒரக்காட்டுப்பேட்டை சுந்தரேசன், காஞ்சி-கல்யாணசுந்தரம், குளத்தூர் கோதண்டன், பொன்னேரி எ. நடராசன் ஆகியோர் பேசினர்.

தோழர் டி. என். சம்பந்தம் அவர்கள், தன்னை ஒரே மனதாகத் தேர்ந்தெடுத்த அனைவருக்கும் நன்றி கூறியதுடன், அனைவரும் ஒத்துழைப்பு தந்து செங்கற்பட்டு மாவட்டத்தின் பணியினை வெற்றியுறச் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

இறுதியாகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் மாவட்டக் குழு ஆற்ற வேண்டிய பணியினை விளக்கியும், அதற்குத் தலைமைக் கழகம் அவ்வப்போது வேண்டிய ஒத்துழைப்பைத் தருமென்றும் கூறினார்.

துணைச் செயலாளர் தோழர் வகாப் நன்றி கூற கூட்டம் மாலை 4 மணிக்கு முடிவுற்றது. பின்னர் அனைவருக்கும் மாவட்டக் குழு சார்பில் தேனீர் வழங்கப்பட்டது.

உத்தேசம் எதுவும் தற்போது இல்லையாம்!

'குளிர் பதன சாதனங்கள் (ரெபரிஜெரேட்டர்கள்), சிறிய—நடுத்தர ரகக் காற்றழுத்தக் கருவிகள் ஆகியவைகளைத் தயாரிக்கும் முயற்சியை சர்க்கார் மேற்கொள்வதற்கான உத்தேசம் எதுவும் தற்போது இல்லை என்று மக்கள் சபையில் தகவல் தரப்பட்டுள்ளது.

இந்திய பருத்தித் துணிகள் ஏற்றுமதி குறைந்துவிட்டதற்குக் காரணம்?

ஜப்பான், ரஷ்யா, சீனா நாடுகளின் போட்டிதானாம்!

புதுடில்லி, ஆக. 22—

மத்திய வர்த்தக மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி மாநிலங்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், இந்த வருடம் முதல் ஆறு மாத காலத்தில் பருத்தித் துணி தயாரிப்புகளின் ஏற்றுமதிகள் குறைந்துவிட்டதற்கான காரணங்கள் பற்றிக் குறிப்பிட்டதாவது:—

"பல்வேறு மார்க்கெட்டுகளில் வர்த்தக நிலவரத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள்; பர்மாவில் தாராள லைசென்ஸ் ஏற்பாடு நிறுத்தி வைக்கப்பட்டது; ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் இந்தியாவுக்குள்ள வழக்கமான மார்க்கெட்டுகள் சிலவற்றில் ஜப்பான், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளுடன் போட்டி; செயற்கைப் பட்டு, மற்றும் இதர வகைப்பட்ட செயற்கை நூல்கள் ஆகியவற்றின் உலக வார்த்தகம் பெருகியுள்ளது; உலகத்தில் பருத்தித் துணி வர்த்தகம் குறைந்துவிட்டது; இந்தியப் பருத்தித் துணிகளைப் பெருமளவுக்கு இறக்குமதி செய்துவந்த பருத்தி உற்பத்தி நாடுகள் சிலவற்றில் உள்நாட்டு உபயோகத்துக்காகத் துணி உற்பத்தி மேற்கொள்ளப்பட்டிருப்பது; உள்நாட்டில் ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்பு; நாட்டில் துணிகளின் தேவை பெருகியிருப்பது—ஆகியவைகளே ஆகும்."

இராணுவத்தில் வேலை வாய்ப்புக்கள்!

சில விவரங்கள்

சென்னை, ஆக. 25—

இராணுவம், கடற்படை ஆகியவற்றைச் சேர்ந்த பல்வேறு பிரிவுகளிலும் ஏராளமான வேலைகள் காலியிருப்பதாக சென்னையிலுள்ள பாதுகாப்புப் படைகளின் ஆள் தேர்ந்தெடுப்புக் கிளைக் காரியாலயத்தின் மூலம் தெரியவருகிறது.

படையில் சேர்ந்தவுடன் அவர்களுக்கு மாதச் சம்பளம் ரூ 40-ம், இலவச உணவும், உடையும், இருப்பிட வசதியும் கிடைக்கும்.

ஆறாவது வகுப்புவரையில் படித்துள்ள 14 வயது முதல் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள், 'சிறுவர்கள் படை'யில் சேரலாம்; நான்காவது பாரம்வரையில் படித்துள்ள $15\frac{1}{2}$ வயதுமுதல் $16\frac{1}{2}$ வயதுக்குட்பட்ட சிறுவர்கள், 'சிறுவர்கள் கடற் படை'யில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

'யுத்த சேவை'யில் ஈடுபட வேண்டியவர்கள் ஐந்தாவது வகுப்பு வரையில் படித்திருக்க வேண்டும்; 17 வயது முதல் 25 வயதுக்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

சுத்தித் தொழிலாளர்கள், முடி வெட்டுபவர்கள், சலவை செய்பவர்கள், சமையற்காரர்கள், பானம் பரிமாறுபவர்கள் போன்ற பல ஊழியர்களும், (யுத்த சேவையில் ஈடுபட வேண்டாதவர்களும்) வேலைக்கு நியமிக்கப்படுவார்கள்; அவர்களுக்கு அவரவர்களுடைய தொழிலில் கொஞ்சம் அனுபவம் இருக்கவேண்டும்; 17 வயது முதல் 35 வயதுக்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

இவைகளில் சேர விரும்புவோர், சென்னை-18, தேனாம்பேட்டையிலுள்ள ஆள் தேர்ந்தெடுப்புக் கிளைக் காரியாலயத்துக்கு எல்லா அலுவல் நாட்களிலும் காலை 8 மணிமுதல் செல்லலாம்; அங்கே போகும் போது வயது, கல்வி, நடத்தை முதலியவைகளுக்கான அத்தாட்சிப் பத்திரங்களை எடுத்துச் செல்ல வேண்டும்.

மயிலை தி. மு. க. பொதுக்கூட்டத்தில் ஈ. வெ. கி. சம்பத்

அரசியல் நிலை குறித்து விளக்கம்

19—8—56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, சென்னை—மயிலை 44-வது வட்டத் தி. மு கழகச் சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது அன்று பெருமழை பெய்தும் பெருவாரியான மக்கள் கூடியிருந்தனர்.

கூட்டத்திற்குத் தோழர் பி. இராமசாமி தலைமை தாங்கினார்.

தோழர் பி. வி. ஆனந்தன், போலீஸ் அதிகாரிகள் கூட்டம் நடத்த அனுமதி கொடுக்க மறுத்ததைக் கண்டித்துப் பேசினார்.

இறுதியாகத் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேசுவதற்கு முன், தோழர்கள் அ. கோபால கிருட்டிணன், எல். வாசுதேவன், சு. த. மூர்த்தி ஆகியோர் முயற்சியால் ஆயிரம் காலணாக்கள் கொண்ட பண முடிப்பும், தோழர் பி. வி. ஆனந்தன் ரூ.5-ம் தேர்தல் நிதிக்கு சம்பத் அவர்களிடம் அளித்தனர்.

தேர்தல் நிதிக்குப் பணம் தந்த தோழர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு தோழர் சம்பத் அவர்கள், இன்றைய அரசியல் நிலைகளைத் தெளிவாக எடுத்துரைத்து, கழகம் தேர்தலில் ஈடுபடுவதின் நோக்கத்தையும் விளக்கினார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமை நிலையச் செய்தி:

மத்திய செயற்குழு

(Working Committee)

9—9—56 ஞாயிறு பிற்பகல் 3-மணிக்கு, சென்னை—இராயபுரம் 'அறிவக'த்தில், தி. மு. கழக மத்திய செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சென்னையில் அண்ணா தெளிவுரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"பணம் ஒன்றினாலேயே தேர்தலில் ஜெயித்துவிட முடியும் என்பது தவறு!

"பணம் இருப்பதாலேயே ஜெயித்துவிட முடியும் என்றால், அன்று பொப்பிலியும், போடியும், பி. டி. இராசனும் தோற்றதேன்?

"அவர்கள், பணம் இருந்தும் தோற்றார்கள் என்பது அல்ல; பணம் இருந்ததினாலேயே தோற்றார்கள்!

"எனவே, பெரியார் பயப்படுவதைப்போல, தேர்தலுக்காக நாங்கள் ஏதோ பெரும் பணம் செலவு செய்து, பெரும் கடனாளியாகி—நோயாளியாகி விடுவோம் என்று கருதத் தேவை இல்லை.

"'இவர்கள் திராவிடநாடு—திராவிட நாடு என்று பேசி வருகிறார்கள்; தேர்தல் மங்கையை மணந்து கொண்டதும் எங்கே இந்தத் திராவிட நாடு பேச்சையே மறந்து விடுகிறார்களோ!' என்றும் பெரியார் கவலைப்படக்கூடும்.

"'கலியாணமானதும், பையன் எங்கே நம்மை எல்லாம் கவனிக்காது, மனைவியின் பேச்சுப்படியே நடப்பவனாகி விடுகிறானோ?' என்று பெற்றோர்கள் கவலைப்படுவதில்லையா? அதுபோல 'தேர்தல் மங்கையை மணந்ததும் நாம் எங்கே திராவிட நாட்டை மறந்து விடுவோமோ?' என்று பெரியார் அஞ்சுகிறார் போலும்! அப்படி ஒன்றும் பயப்படத் தேவை இல்லை!

"'150 ரூபாய்க்கு ஆசைப்பட்டுத்தான் தேர்தலில் நிற்கிறார்கள், இவர்கள்,' என்று கூறுகிறார்கள்; அதற்காகத்தான், தோழர் நடராசன் பேசும்போது நான் கூறினேன்—'வேண்டுமானால், தேர்தலில் நின்று வெற்றி பெற்ற பிறகு கிடைக்கிற 150 ரூபாயையும் பெரியாருக்கே அனுப்பிவைத்து விடுகிறோம்' என்று!

"தேர்தலில் நிற்பது 150 ரூபாய்க்குத்தான் என்று கூறும் இவர்கள் நாம் தேர்தலில் நிற்காமலிருந்தாலும், 'இவர்கள் ஏன் தேர்தலில் நிற்கவில்லை தெரியுமல்லவா? காமராசர் அண்ணாதுரையைக் கூப்பிட்டுப் பேரம்பேசி, ரூ. 50,000 தந்து, தேர்தலில் நிற்க வேண்டாமென்று கூறிவிட்டார்; அந்த 50 ஆயிரம் ரூபாய்க்காகத்தான் தேர்தலில் இவர்கள் நிற்கவில்லை' என்றுகூறினால் என்ன செய்வது?

"'திராவிடகழகத்தார் அப்படிக் கூறுவார்களா?' என்று கேட்டால், அவர்கள் எதைத்தான் கூறாமலிருந்தார்கள், இதைக் கூறாமலிருப்பதற்கு?

"பணம் கொடுத்து, காங்கிரசார் தேர்தலில் வெற்றி பெற நினைக்கிறார்கள் என்பதும் உண்மைதான்!

"நாம் ஆயிரம் ரூபாய் செலவில் எழுப்புகிற எதிர்ப்பைச் சமாளிக்க காங்கிரசார் ரூ. 19 ஆயிரம் செலவிட்டாலும் கஷ்டப்பட வேண்டும்.

"ஆகவே, நாம் இந்த ஆயிரம் ரூபாய் செலவிடப் பயப்பட்டால் காங்கிரசார் அந்த ரூ. 19 ஆயிரமும் செலவிடாமல் தேர்தலில் வெற்றி பெற்று விடுவார்களே!

"எனவே, காங்கிரசிடம் பணம் இருக்கிறது என்பதற்காகவே நாம் தேர்தலில் நிற்கப் பயப்பட்டால், அந்தப் பணத்தைச் செலவிடாமலேயே அவர்களை வெற்றி பெற விட்டு விடுவது நல்லதா?

"எனவே, தி. மு. கழகம் தேர்தலில் நிற்கும்போது, நமது மனச்சாட்சி—உள்ளம், அறிவு, அனுபவம்—என்ன சொல்லுகின்றன? நாட்டுச் சூழ்நிலை என்ன கூறுகிறது? நாட்டவர் என்ன கருதுகிறார்கள்?' என்பதைத்தான் நாம் எஜமானராகக் கொள்ளவேண்டுமே தவிர, 'நாம் தேர்தலில் ஈடுபடுவது குறித்து மாற்றார் என்ன கூறுகிறார்கள்?' என்பதைக் கவனித்து அல்ல!

"'காமராசர் நல்லவர்—எனவே, அவரை எதிர்ப்பதா?' என்று கேட்கிறார்கள்.

"'காங்கிரஸ் கெட்டது' என்கிறார்கள்; ஆனால், 'காமராசர் நல்லவர்,' என்கிறார்கள்; இதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

"காமராசர் நல்லவர் என்பதற்காகவே காங்கிரசை எதிர்க்கக்கூடாது என்று பேசுவதைக் கேட்கும்போது, 'அந்தோ, தமிழகமே! எவ்வளவு எழுச்சி பெற்றாய்! இந்த நிலை இன்று உனக்கு ஏற்பட்டதே!' என்றுதான் நமக்குச் சொல்லத் தோன்றுகிறது!

"ஒன்று—நாம், நல்லவர்களையே ஆட்சிக்கு அனுப்புவது என்று ஒரு கொள்கையை வகுத்துக் கொள்ளவேண்டும். நல்லவர்கள் என்பதற்கு ஒரு இலக்கணமும் வகுத்துக்கொள்ளலாம்; அதன்படி செயல்படலாம்.

"ஆனால், காங்கிரஸ் கெட்டதுதான்; ஆனால் காமராசர் நல்லவர்,' என்று கூறி, காங்கிரசையே ஆதரிப்பேன்' என்றால் என்ன பொருள்?

"நல்லவர் என்று காமராசரை ஆதரிப்பதானால், நேரு நல்லவர் இல்லையா? காமராசரைவிட பெரிய தலைவர்; அகில உலகமும் அறிந்திருக்கிற தலைவர்; நல்ல அறிவாளி; என்றாலும், நாம் அவரை எதிர்க்காமல் சும்மாவா இருக்கிறோம்?

"காமராசர் நம்மவர் என்று நாம் கொண்டாடுகிறோம்; ஆனால் அவர் தன்னை ஒரு முறைகூட 'திராவிடன்' என்று கூறிக்கொண்டது இல்லை. 'எனக்கு இந்தியாதான் பிடிக்கும்; நான் ஒரு இந்தியன்; திராவிட நாடு என்பது எல்லாம் கூடாது' என்றுதான் பேசிவருகிறார்—இடைவிடாது!

"அவரது இந்த நேர்மையை நான் பாராட்டுகிறேன்.

"ஆனால் அப்படிப்பட்டவரை, கனவில் கண்ட கன்னியை எண்ணி ஏங்குவதுபோல, 'நம்மவர்—ஆகவே நல்லவர்' என்று கூறிக்கொண்டிருக்க நான் வெட்கப்படுகிறேன்.

'நாம் காட்டுகிற பற்று—பாசம் இவற்றில் ஒரு துளியைக்கூட காமராசர் நம்மிடம் காட்டவில்லையே! இவரை எப்படி நம்மவர் என்பது?

"நல்லவர் என்றால், நாட்டு மக்களுக்கு வாழ்வு தர இன்னின்ன செய்தார் என்று பட்டியல் காட்டட்டும்; ஏற்றுக்கொள்வோம்.

"'திராவிட நாடு திராவிடருக்கே' என்பதை ஏற்காதவரை 'நம்மவர் என்று எப்படி ஏற்க முடியும்?

'திராவிட நாடு திராவிடருக்கே' என்பதை ஏற்காதவர், நமக்கு மாற்றாராயிற்றே?

"வீட்டுக்குக் குடித்தனம் வருபவர்கள் நல்லவர்கள்தானா என்று நாம் பார்க்க வேண்டும். 'அரசியலில் நல்லவரா கெட்டவரா?' என்பது, நாட்டு மக்களுக்கு அவர்கள் செய்யும் நன்மை—தீமைகளைப் பொறுத்ததே!

"எனவே, ஜனநாயகம் தழைக்க—மக்களுக்கு நல்ல ஆட்சி கிடைக்க நாம் தேர்தலில் ஈடுபடுவது அவசியமாகிறது.

"ஆகவே, தோழர்கள் படபடப்பு இன்றி—அதே நேரத்தில் மந்தம் இல்லாமல்—ஆவேசப்படாமல் — ஆர்வம் குன்றாமல்—தலைவெறி கொள்ளாமல்—கட்டுப்பாடு குலையாமல்—மெள்ள மெள்ள ஆனால் நிச்சயமாக இலட்சியப் பாதையை அடைவதற்கு வேலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

'தொழில்துறையில் தென்னாடு பின்தங்கிக் கிடக்கிறது'

முதலமைச்சர் காமராசரும் கூறுகிறார்

விஞ்ஞான வித்தகர் ஜி. டி. நாயுடு பெருமுயற்சியால் ஒரு கார்பன் தொழிற்சாலை

கோயமுத்தூர், ஆக 28—

கோவைக்கு அருகிலுள்ள போத்தனூரில், கார்பன் மைப் பொருள்கள் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

தென்னாட்டில் முதன் முதலாகத் தொடங்கப்படும் இந்தத் தொழிற்சாலையானது ஆண்டு தோறும் ரூ. 16 இலட்சம் பெறுமானமுள்ள கார்பன் தாளையும், ரூ. 5½ இலட்சம் பெறுமானமுள்ள ரிப்பனையும் உற்பத்தி செய்யும்.

இத்தொழிற்சாலையின் ஆலோசகரான திரு. ஜி. டி நாயுடு அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் சொன்னார் :—

"இதுவரையில், கார்பன் தாள், டைப்ரைட்டர் ரிப்பன்கள் போன்ற பொருள்கள் வெளிநாடுகளிலிருந்துதான் இறக்குமதியாகியுள்ளன; இந்தியாவில் ரூ. 55,32,750 பெறுமானமுள்ள கார்பன் தாள்களும், ரூ. 39,00,000 பெறுமானமுள்ள ரிப்பன்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் இந்தப் பொருள்கள் சென்னை, மைசூர், ஆந்திரா, ஐதராபாத் உள்ளிட்ட தென்னிந்தியாவிற்குப் போதுமானவையாகும்."

தொழிற்சாலையைத் திறந்து வைத்துப் பேசிய முதலமைச்சர் காமராசர், திரு ஜி. டி நாயுடுவின் தொழில் திறமையையும், முயற்சியையும் பாராட்டிவிட்டுக் குறிப்பிட்டதாவது :—

"தொழில் துறையில் மற்றப் பல மாகாணங்களைக் காட்டிலும் சென்னை மகாணம் மிகவும் பின் தங்கி இருக்கிறது; தொழில் துறையில் அது முன்னேற வேண்டியது மிகவும் அவசியமாகும்."

கழகக் கூட்டம்

☆

பவானி :

'பராசக்தி' திடல்

30-8-56 மாலை 6-30 மணிக்கு

தலைவர் : துரை

பேசுவோர் :

ஈ. வெ. கி. சம்பத்

எஸ். அப்பாவு

குறிப்பு:—30—8—56 மாலை 3-மணிக்கு, பவானி கூடுதுறை பங்களாவில், பவானி வட்ட தி. மு. கழக ஊழியர் கூட்டம் நடைபெறும்; இரவு 10-மணிக்கு பவானி வட்ட செயற்குழு அமைப்புக் கூட்டம் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

29-8-56 மாலை 6-30 மணிக்கு, சென்னை—இராயபுரம், பனைமரத் தொட்டியிலுள்ள சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பகுத்தறிவு மன்றக் கட்டிடத்தில், 'எது பொதுமொழி?' எனும் தலைப்பில், தோழர் ப. புகழேந்தி தலைமையில், தோழர்கள் பலர் பேசுவர்.

ஆணைப் போலவே பெண்ணையும் தத்து எடுத்துக் கொள்ளலாம்

மக்கள் சபையில் மற்றுமோர் மசோதா

புதுடில்லி, ஆக. 27—

இந்திய மேல்சட்டசபையில் இந்து 'தத்து' எடுப்பது, பராமரிப்பு பற்றிய மசோதா கொண்டுவரப்பட்டது.

இதுவரையில் இந்துக் குடும்பங்களில் குழந்தை இல்லாதவர்கள் தத்து எடுப்பதானால், ஆண் குழந்தைகளை மட்டும் தத்து எடுக்க முடிந்தது; இனி, ஆண் குழந்தைகளை மட்டுமின்றி பெண் குழந்தைகளையும் தத்து எடுப்பதற்கு இந்த மசோதா வழிவகை செய்கிறது. அத்துடன், இந்து விதவைப் பெண்கள் தாங்களாகவே குழந்தைகளைத் தத்து எடுக்கவும் இம்மசோதா இடமளிக்கிறது.

இம் மசோதாவை இந்திய அரசாங்க சட்ட விவகாரத் துறை அமைச்சர் எச். வி. படாஸ்கர் கொண்டுவந்தார்.

இந்தச் சட்டத்தில் தத்து எடுப்பது, தத்து எடுக்கப்பட்டவர்களின் பராமரிப்பு முதலிய விதிகளில் மாறுதல் செய்து வரையறுக்கும் நோக்கத்துடன் இம் மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது; இது, இந்துச் சட்டத்தின் நான்காவது பாகமாகும். முந்திய மூன்று பாகங்களும் முறையே திருமணம், வாரிசு உரிமை, வயது வராதவர்களுக்குப் பராமரிப்பு தருவோர் முதலிய அம்சங்கள் சம்பந்தப்பட்டவைகளாகும்.

இப்போது கொண்டுவரப்பட்டுள்ள மசோதாவின் இன்னொரு பிரிவு, 'ஒருவர் தத்து எடுக்கிறார் என்ற காரணத்துக்காக, அவரிடம் ஏற்கனவே ஒப்புவிக்கப்பட்ட சொத்துக்களை மீண்டும் எடுத்துக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை' என்று கூறுகிறது.

இது சம்பந்தமான பழைய விதிகள், நாசமேற்படச் செய்யும் வழக்குகள் பலவற்றைத் தோற்றுவிக்கின்றனவாகையால் அவ்விதிகளை இப்போது நீக்கிவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய மசோதா, இந்துச் சட்டத்தில் தத்து எடுப்பது பற்றி இதுவரை வழக்கத்தில் இருந்து வந்த விதி, வாசகம், அவைகளின் விளக்கம் ஆகியவற்றில் குறிப்பிட்ட சிலவற்றைத் தவிர, மற்றவைகளை முற்றிலும் நீக்கிவிடுகிறது.

இம்மசோதா சட்டமான பிறகு அச்சட்ட விதிகளின்படி அல்லாது மேற்கொள்ளப்படும் தத்து எடுக்கும் நடவடிக்கைகள் செல்லாது.

ஒருவர் ஒரு குழந்தையைத் தத்து எடுப்பதனால் அதற்கு நான்கு நிபந்தனைகளை நிறைவு செய்யவேண்டும்.

தத்து எடுப்பவர், தத்து எடுப்பதற்கான தகுதியும் சக்தியும் உரிமையும் படைத்தவராக இருக்க வேண்டும்; அதேபோன்று, தத்து கொடுப்பவருக்கும் தத்து கொடுக்கும் தகுதி இருக்கவேண்டும்; தத்து எடுக்கப்படுபவருக்கும் அதற்கான தகுதி இருக்கவேண்டும்; தத்து எடுப்பதும் தத்து கொடுப்பதும் இது சம்பந்தமான வேறு சில விதிமுறைகளுக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும் — இவைகளே அந்த நான்கு நிபந்தனைகள் ஆகும்.

ஒரு புத்திசுவாதீனமுள்ளவரும் வயது வந்தவருமான இந்து ஆண் ஒரு மகனையோ, மகளையோ தத்து எடுத்துக் கொள்ளலாம். ஆனால் புத்தி சுவாதீனமிழந்தவளாகவோ, வயது வராதவளாகவோ இல்லாத நல்ல நிலையில் உள்ள மனைவி இருந்தால் தத்து எடுப்பதற்கு அவளுடைய சம்மதம் இருந்தாக வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர்களிருந்தால் — அவர்கள் தகுதியிழந்தவர்களாக இல்லாவிட்டால் தவிர—அவர்கள் அத்தனை பேருடைய சம்மதமும் பெறப்பட்டதாக வேண்டும். அதேபோன்று புத்தி சுவாதீனமுள்ள வயது வந்த விதவைப் பெண்ணோ, கன்னிப் பெண்ணோ தனக்கு ஒரு மகனையோ, மகளையோ தத்து எடுத்துக் கொள்ளலாம்.

தந்தை, தாய், அவ்விருவரும் இல்லாவிட்டால் பராமரிப்பவர் ஆகியோர் மட்டுமே ஒரு குழந்தையை இன்னொருவருக்கு தத்துக் கொடுக்கலாம்.

தந்தை உயிருடனிருக்கும் போது தத்துக் கொடுக்கும் உரிமை தந்தைக்கு மட்டுமே உண்டு. அதையும் அவர் தாயாரின் சம்மதத்தைப் பெற்றால் மட்டுமே செய்யமுடியும்.

சென்னை சர்க்கார் டிரான்ஸ்போர்ட் ஜெனரல் ஒர்க்கர்ஸ் யூனியன்

மாபெரும் கூட்டம்

★

29-8-56 மாலை 6-30மணிக்கு இராயப்பேட்டை காங்கிரஸ் திடலில் நடைபெறும்.

முன்னாள் மேயர் தோழர் எம். இராதாகிருஷ்ண பிள்ளை தலைமை வகிப்பார்.

தி. மு. கழகத் துணைப்பொதுச் செயலாளர் என்.வி. நடராசன், தோழர் பி. எஸ். வரதாச்சாரி, மற்றும் பல தோழர்கள் பேசுவர்.

கண்ணதாசன் கருத்துரை

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

எல்லா நடவடிக்கைகளையும் சொற்பொழிவுகளையும் இந்தியிலேயே நடத்தினார்கள்; இங்குள்ள தமிழ் மக்கள் பொறுமையோடு சகித்துக் கொண்டுதானிருந்தனர் — புரிந்து கொள்ள முடியாவிட்டாலும்! ஆனால் அந்த மாநாட்டில் தமிழகத்தைச் சேர்ந்த ஒரு காங்கிரஸ்காரர், தனக்குத் தெரிந்த தமிழில், 'மகா ஜனங்களே' என்று ஆரம்பித்ததும் 'இந்தியிலே பேசு; அல்லது ஆங்கிலத்திலே பேசு' என்று கூச்சலிட்டார்கள் — அங்கு கூடியிருந்த குறைந்த தொகையினரான மொழி வெறி பிடித்த வடவர்! அது மட்டுமல்ல; பெரும்பாலோர் வெளியேறியும் விட்டார்கள்! பெரும்பான்மையினரான தமிழர்கள் நாள் முழுவதும் 'இந்தி'யை சகித்துக் கொண்டார்களே! ஒரு சில நிமிடங்கள் தமிழில் பேசுவதை அவர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லையே! ஏன் இந்த வேறுபாடு? எல்லோரும் பாரத மாதா புத்திரர்கள் தான் என்று எப்படிக் கூறமுடியும்? எப்படி 'ஏக இந்தியா' தத்துவம் செயல்பட முடியும்?"—

திருச்சி நகர 25-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், திருச்சி டவுன் ஹால் மைதானத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று, தோழர் அ. அருணகிரி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எம் எஸ். மணி, எஸ் எஸ் தென்னரசு, அம்பில் தர்மலிங்கம் ஆகியோர் பேசின பின்னர், தோழர் கண்ணதாசன் அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்!

இறுதியாக செயலாளர் நன்றி கூற இரவு 11-15 மணியளவில் கூட்டம் முடிவுற்றது.

(ந. - தி.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம் ஏ